## இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## மேல் முறையீட்டு வழக்கு எண். 12/2006

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை எதிர்மேல்முறையீட்டாளர்/வாதிகள் தரப்பில் மூன்றாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆர்.ஜனனி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில் | தந்தை பெயர் | : மருதமுத்து |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 05.04.2024

**P.W. : 3**

**மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2 ம் எதிர்மேல்முறையீட்டாளர் வைத்தீஸ்வரன் அழைத்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக எனது தந்தையின் தாயாரைத்தான் அப்பாயி என்று அழைப்பேன் என்றால் சரிதான். விஜயம்மாள் என்பவர் எனது அப்பாவின் தாயார் அல்ல. அவர் எனது அப்பா வழி உறவினர் ஆவார்.விஜயம்மாள் என்பவர் எனக்கு சின்ன அப்பாயி ஆவார். அவர் எங்கள் குடும்பத்திற்கு என்ன உறவு என்றால் என் அப்பாவிற்கு சின்ன அம்மா உறவு முறை ஆவார். அவர் என் அப்பாவிற்கு முந்தைய தலைமுறை ஆவார். விஜயம்மாள் எந்த ஆண்டு பிறந்தார் என்று தெரியாது. அவர் தற்போது உயிரோடு இருந்தால் எத்தனை வயது இருக்கும் என்று தெரியாது. எனது அப்பா பெயர் மருதமுத்து. என் அப்பா எந்த ஆண்டு பிறந்தார் என்று எனக்கு சரியாக தெரியாது. என் அப்பா இறந்து சுமார் 3

ஆண்டுகள் இருக்கும். சரியாக எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா இறக்கும்போது அவருக்கு சுமார் 85 வயது இருக்கும். இந்த வழக்கின் முதல் வாதி விஜயம்மாள் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2012 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். முதல் வாதி விஜயம்மாளின் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. முதல் வாதி விஜயம்மாளுக்கு திருமணம் ஆனதா, இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் எனது அப்பா மருதமுத்துவை தவிர எனது தாத்தா மருதமுத்து என்று குறிப்பிட்டுள்ள நபர் எந்த ஆண்டு இறந்தார் என்று குறிப்பாக சொல்ல முடியாது. எங்கள் தாத்தா மருதமுத்து என்று சொல்லும் நபரின் உடன் பிறந்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் எனது தாத்தா மருதமுத்து என்று குறிப்பிட்டுள்ள நபரின் வாரிசுகள் பற்றிய விவரம் பற்றி தெரியுமா என்றால் அவருக்கு குழந்தைகள் இல்லை. நான் முதல் வாதி விஜயம்மாளை தெரியும் என்றும் அவரை அப்பாயி என்று அழைப்பேன் என்றும் முதல் விசாரணையில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோன்று முதல் விசாரணையில் எனது தாத்தா மருதமுத்து என்று குறிப்பிட்டுள்ள நபரை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. 2ம் எதிர் மேல்முறையீட்டாளர் வைத்தீஸ்வரன் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.